இணைப்பு-I

[........2 ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 81-க்கான விடையைக் காண்க]

அவைமுன் வைக்கப்படும் அறிக்கை.

(அ) ஆம்

(ஆ) கீழ்க்காணும் நடைமுறைகளுக்குட்பட்டு நிலவள வங்கிகள் மூலம் முன் கடன்கள் தீர்க்க கடன்கள் வழங்க அனுமதிக்கப்பட்டுள்ளது;

(i) மாநில நிலவள வங்கி ஓராண்டில் வழங்கும் மொத்தக் கடன் தொகையில் 10 சதவீதத்திற்கு உட்பட்டு இருக்க வேண்டும்,

(ii) ஒற்றியின் பேரில் வாங்கப்பட்ட கடன்கள், அடைமானம் வைத்துப் பெற்ற கடன்கள், மற்றும் டிகிரி கொடுக்கப் பட்ட கடன்கள் ஆகிய முன் கடன்களைத் தீர்க்க கடன் வழங்கப் படுகிறது.

(iii) முன் கடன்கள் தீர்க்க மட்டுமே வழங்கப்படும் கடன்கள் உறுப்பினர் ஒருவருக்கு ரூ. 5,000-க்கு அதிகப்படக் கூடாது.

(iv) அரசு கடன் மற்றும் ஒற்றியின் பேரில் வாங்கப்பட்ட கடன் தவிர, பிற முன் கடன் கணக்கை தீர்க்க மட்டும் கடன் பெற வேண்டுமானால், மேற்குறிப்பிட்ட கடன்கள் அவைகளைத் தீர்க்க கோரப்படும் கடன் மனுவின் தேதியிலிருந்து குறைந்த அளவு மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் வாங்கப்பட்டிருக்க வேண்டும். இக்கால அளவு, முன் கடன்களைத் தீர்ப்பதோடு, மற்ற காரணங்களுக்கும் சேர்த்து கோரப்படும் கடன்களுக்குப் பொருந்தாது.

(இ) இல்லை.

இணைப்பு II

[....13ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 85-க்கான விடையைக் காண்க.]

(அ) கடல் மீனளத்தை மேம்படுத்துவதற்காக இழுபடகுகளை (Trawlers) இறக்குமதி செய்ய 1973 ஆம் ஆண்டில் மத்திய அரசு அறிவித்த திட்டத்தின் கீழ் மாநில மீன் வளர்ச்சிக் கழகம், மெக்சிகோவில் ஒரு தனியார் நிறுவனத்திடமிருந்து இரு இழு படகுகளைக் காலம் தாழ்த்தித் தொகை கொடுக்கும்படி அடிப் படையில் வாங்கியுள்ளது.